# சம நீதி - இட ஒதுக்கீடு சட்ட வடிவம் பெற்றது தி.மு.க. ஆட்சியில்தான்!

என் இனிய தமிழ்ச் சொந்தங்களே, அண்மையிலே பெரியார் திடலோடு தொடர்பில் உள்ள இளைஞர்கள் என்னிடம் ஒரு பேட்டி எடுப்பதற்காக வந்திருந்தார்கள்.

அதில் ஒரு தங்கை திடீரென்று ஒரு கேள்வியை கேட்டார். நான் சற்று தடுமாறினேன். பதில் தெரியாமல் அல்ல. என்ன பதிலை சொல்வது எந்த பதில் மிகச் சிறப்பான பதிலாக இருக்கும் என்பதிலே தான் சிக்கல். அப்படி என்ன கேள்வி.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று சொன்னவுடன் உங்கள் மனதிலே தோன்றுவது என்ன? இதுதான் அந்த கேள்வி.

பராசக்தி என்று சொல்வதா? நெஞ்சுக்கு நீதி என்று சொல்வதா? பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் என்று சொல்வதா? சிறார்களின் சத்துணவிலே சேர்க்கப்பட்ட முட்டை என்று சொல்வதா? திருவாரூரில் பல ஆண்டுகள் ஓடாதிருந்த ஆழித்தேர் என்று சொல்வதா? செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலே தமிழ்நாடு முதல்வர் ஏற்றும் தேசியக்கொடி என்று சொல்வதா? 13 வருடங்கள் கழித்து மீண்டும் முதல்வராக பதவியேற்றது என சொல்வதா? முரசொலி என்று சொல்வதா? ஓயாத உழைப்பு என்று சொல்வதா? இந்திய தேசமே பார்த்து வியக்கின்ற இன்றைய முதல்வர் என்று சொல்வதா? டெசோ, என்ற அமைப்பைச் சொல்வதா?.

வள்ளுவர் கோட்டத்தை சொல்வதா?, கன்னியாகுமரியில் வான்தொட்டு நிற்கும் வள்ளுவர் சிலையை சொல்வதா?, 1962-ல் காஞ்சியில் நான் அவரை பார்த்த முதல் சந்திப்பை சொல்வதா? படங்களுக்கு தமிழில் பெயர் வைத்தால் மானியம் வழங்கியதை சொல்வதா? விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதை சொல்வதா? அவர்களின் ஒட்டுமொத்த கடனையும் ஒரே ஆணையில் ரத்து செய்ததை சொல்வதா? அவர் வளர்த்த கவியரங்க பட்டிமன்றத்தை சொல்வதா? கலைஞரின் சாதனை பட்டியலை சொல்வதற்கே 10 நாள் ஆகுமே?.

முத்தமிழறிஞர் கலைஞர் என்று சொன்னதும் என் மனதில் தோன்றுவது பேரறிஞர் அண்ணா அவர்களே என்றேன். அடுத்த கேள்வி தமிழ்நாடு வாக்காளர்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம்? என் பதில், இனத்தை இனமே பகைப்பது எதிரியின் வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதை மறந்து நடப்பது. ஊருக்கு ஒரு கட்சி, ஜாதிக்கு ஒரு தலைவன், ஆளுக்கொரு நீதி, பாழாய் போகிறது தமிழ் சாதி. நம்மை மோத விட்டு வேடிக்கை பார்க்கின்றவன் எண்ணிக்கையில் மூன்று சதவீதம் தான்.

அதை மறக்கடித்து, மறைத்து, வேறு வர்ணம் பூசி, மதத்தை முன்னிறுத்துவது நம் வாக்காளர்களுக்கு புரியவில்லை. அவர்கள் மதத்தை வளர்க்கின்ற இயக்கத்துக்கும் மூன்று எழுத்து பெயர்தான்.

வாக்காளர்களே! இந்திய தேசத்தில் ஒருவேளை உணவு மட்டும் உண்டு வாழ்கின்றவர்கள் எத்தனை சதவீதம் என்று உங்களுக்கு தெரியுமா? சொந்த வீடு இல்லாமல் வாழ்கின்றவர்கள் எத்தனை சதவீதம் என சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? வேலையில்லாத பட்டதாரிகள் இந்திய தேசத்திலே அதிகம் என்பது தெரியுமா உங்களுக்கு? திருமணமே செய்ய வசதியும் வாய்ப்பும் இல்லாமல் கன்னிகளாகவே பெண்கள் எத்தனை ஆயிரம் பேர் வாழ்கின்றார்கள் தெரியுமா உங்களுக்கு?.

ஒன்றிய அரசின் சமதர்ம சமுதாயம் என்பது வெறும் ஏட்டிலே தான் இன்னமும் இருக்கிறது. ஆனால் சம நீதி, இட ஒதுக்கீடு, இவையெல்லாம் சட்ட வடிவம் பெற்று செயல்பட்டு வருவது தமிழ்நாட்டில் மட்டும்தான்.

**வி.செ.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்



அனைத்து மக்களுக்குமான அரசியலில் மதத்தை நுழைக்கின்றவர்கள் யாராக இருந்தாலும் மனித நேயத்தின் விரோதிகள் என்பதனை நமது வாக்காள பெருமக்கள் புரிந்து கொள்ள வேண்டாமா? அவர்களின் மாநிலத் தலைவர் ஒருவர் பாகிஸ்தானுக்குள் நுழைந்த அபிநந்தன் அவர்களின் விமான கதையைச் சொல்லி வீரமும் விவேகமும் உள்ளவர்கள் நமது ஒன்றிய ஆட்சியாளர்களே என மார் தட்டுகின்றார்.

நான் அவரிடம் கேட்கின்றேன். சீனாவிடம் எத்தனை சதுர மைல்களை நமது பாரதம் பறி கொடுத்துள்ளது. அதில் ஒரு சதுர அடியையாவது ஒன்றிய அரசு மீட்டு இருக்கிறதா?

தி.மு.க. ஆரம்பிக்கப்பட்டது ஒரு சம்பவம். பேரறிஞர் அண்ணாவின் அளப்பரிய ஆற்றலினால் அந்தச் சம்பவம் சரித்திரமானது. கலைஞரின் அதி அற்புத செயலாற்றலினால் அந்த சரித்திரம் மாபெரும் சாதனையானது. தற்போது சாதனை வரலாறு ஆகப்போகிறது. திராவிட அரசியல் மூலம் இந்திய நாட்டின் ஜனநாயகத்தை மீட்டெடுக்கப் போகும் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் வரலாற்று நாயகன் ஆவார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் சக்கரை ஆ.சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜெ.ஜெயக்குமார் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை : 600 018
நாள்: 27.06.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் இன்று

# நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகம்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் திறந்து வைக்கிறார்!

*நெல்லை, ஜூன் 28 -*

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகம் திறப்பு விழா நிகழ்வு இன்று 28 ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணியளவில் நெல்லை வண்ணாரபேட்டை தெற்கு புற வழிச் சாலை குறிச்சி சிக்னல் அருகில் கழகத்தின் மூத்த முன்னோடி கவிஞர்குமார.சுப்பிரமணியன் தலைமையில் நெல்லைமத்தியமாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும்கதர்கிராமதொழில்கள் வாரிய அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்பங்கேற்று நெல்லை மத்திய மாவட்ட கழகஅலுவலகத்தைதுவக்கி வைக்கிறார். நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநகரச் செயலாளர்சு.சுப்பிரமணியன்,தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர்சிவபத்மநாதன், தென்காசிவடக்குமாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., இந்நாள்,முன்னாள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக தோழமைக் கட்சித் தோழர்கள், தலைமைகழகநிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு,உறுப்பினர்கள்,மாவட்டகழகநிர்வாகிகள் மற்றும் நிர்வாகிகள் பகுதிக்கழக,ஒன்றியக்கழக, பேரூர் கழக, வட்டக் கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக இளைஞர் அணி உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள்,கழகத்தின் மூத்த முன்னோடிகள், முத்தமிழ்அறிஞர்உடன்பிறப்புகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

இதற்கானஏற்பாடுகளை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்செய்துள்ளார்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதி மின் வாரியம் கூட்டம் சிட்லபாக்கத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் பொதுமக்கள் கோரிக்கையேற்று தாம்பரம் மாநகர கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு தொகுதியில் உள்ள மின் வெட்டு, மின் அழுத்தம் குறித்து இனி வரும் காலங்களில் இது போன்று நடைபெறாமல் இருக்க மின்சார துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மற்றும் ஆங்காங்கே உள்ள பழுதுடைந்த டிரான்ஸ்பார்மர்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், ச.ஜெயபிரதீப், மற்றும் அதிகாரிகள் மேற்பார்வையாளர் முரளி, தாம்பரம் செயற்பொறியாளர் அசோகன், தாம்பரம் உதவி பொறியாளர் இளையராஜா, தாம்பரம் மேற்கு பொறியாளர் ராஜன், தாம்பரம் உதவி செயற்பொறியாளர் முருகன், தாம்பரம் கடபேரி உதவி செயற்பொறியாளர் ரவி, செல்ல சேலையூர் செயற்பொறியாளர் சிவராமன் உட்பட்ட பிரிவு பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.






தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞரணி சார்பில்

# கழக அரசின் ஈடில்லா ஆட்சி, ஈராண்டே சாட்சி எனும் தலைப்பில் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனையின்படியும், தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக அரசின் 2 ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெறவுள்ளது.

**பாப்பிரெட்டிப்பட்டி சட்டன்றத் தொகுதி**
நாள் : 30.06.2023 வெள்ளிக்கிழமை

| ஒன்றியம் / பேரூராட்சி இடம் | தலைமைக் கழக பேச்சாளர்கள் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|
| **பாப்பிரெட்டிப்பட்டி பேரூராட்சி** காந்தி நகர் வார்டு - 4 காலை 9.00 மணி | திரு.இலயோலா த.ராஜசேகர் | திரு. கோ.ஜெயச்சந்திரன், பேரூர் கழக செயலாளர் |
| **பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு** மோளையானூர் ஊராட்சி - பூனையானூர் காலை 10.00 மணி | திரு.இலயோலா த.ராஜசேகர் | திரு. சி.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர் |
| **பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு** போதக்காடு காலை 11.00 மணி | திரு.இலயோலா த.ராஜசேகர் | திரு.B.S.சரவணன், ஒன்றிய கழக செயலாளர் |
| **பி.மல்லாபுரம் பேரூராட்சி** வ.உ.சி.தெரு வார்டு - 10 பகல் 12.00 மணி | திரு.இலயோலா த.ராஜசேகர் | திரு. K.கௌதமன், பேரூர் கழக செயலாளர் |
| **தருமபுரி கிழக்கு** வே.முத்தம்பட்டி ஊராட்சி - மங்கலன் கொட்டாய் மதியம் 1.00 மணி | திரு.இலயோலா த.ராஜசேகர் | திரு. K.P.சக்திவேல், ஒன்றிய கழக செயலாளர் |
| **கடத்தூர் பேரூராட்சி** 7 வது வார்டு புட்டிரெட்டிப்பட்டி சாலை மாலை 3.00 மணி | திரு.பசும்பொன் இராமச்சந்திரன் | திரு. T.மோகன், பேரூர் கழக செயலாளர் |
| **கடத்தூர் மேற்கு** ஒபிளிநாயக்கனஅள்ளி ஊராட்சி - கெடகாரஅள்ளி மாலை 4.00 மணி | திரு.பசும்பொன் இராமச்சந்திரன் | திரு. R. சிவபிரகாசம், ஒன்றிய கழக செயலாளர் |
| **தருமபுரி வடக்கு** குப்பூர் ஊராட்சி - ஆலங்கரை மாலை 5.00 மணி | திரு.பசும்பொன் இராமச்சந்திரன் | திரு. N.A. மாது, ஒன்றிய கழக செயலாளர் |
| **கடத்தூர் கிழக்கு** சிந்தல்பாடி ஊராட்சி - மோட்டூர் மாலை 6.00 மணி | திரு.பசும்பொன் இராமச்சந்திரன் | திரு. T.நெப்போலியன், ஒன்றிய கழக செயலாளர் |

**அரூர் சட்டன்றத் தொகுதி**
நாள் : 03.07.2023 திங்கட்கிழமை

| ஒன்றியம் / பேரூராட்சி இடம் | தலைமைக் கழக பேச்சாளர்கள் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|
| **அரூர் மேற்கு** அச்சல்வாடி ஊராட்சி - குடுமியாம்பட்டி காலை 9.00 மணி | திரு. தருமபுரி அதியமான் | திரு. வே.சௌந்தராசு ஒன்றிய கழக செயலாளர் |
| **அரூர் பேரூராட்சி** கலைஞர் நகர் (வர்ணதீர்த்தம்) காலை 10.00 மணி | திரு. தருமபுரி அதியமான் | திரு. முல்லை ரவி பேரூர் கழக செயலாளர் |
| **அரூர் வடக்கு** வடுகப்பட்டி ஊராட்சி - வேப்பநத்தம் காலை 11.00 மணி | திரு. தருமபுரி அதியமான் | திருமதி. R.வேடம்மாள் Ex.MLA ஒன்றிய கழக செயலாளர் |
| **அரூர் கிழக்கு** வேடகட்டமடுவு பகல் 12.00 மணி | திரு. தருமபுரி அதியமான் | திரு. கோ.சந்திரமோகன் ஒன்றிய கழக செயலாளர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் |
| **மொரப்பூர் கிழக்கு** R.கோபிநாதம்பட்டி ஊராட்சி - ராமாபுரம் மாலை 4.00 மணி | திரு. காவேரிப்பட்டிணம் இளையராஜா | திரு. E.T.T.செங்கண்ணன் ஒன்றிய கழக செயலாளர் |
| **கம்பைநல்லூர் பேரூராட்சி** மாரியம்மன் கோயில் தெரு 6-வது வார்டு மாலை 5.00 மணி | திரு. காவேரிப்பட்டிணம் இளையராஜா | திரு. E.மோகன் பேரூர் கழக செயலாளர் |
| **மொரப்பூர் மேற்கு** இருமத்தூர் ஊராட்சி - வையம்பட்டி மாலை 6.00 மணி | திரு. காவேரிப்பட்டிணம் இளையராஜா | திரு. மா.ரத்தினவேல் ஒன்றிய கழக செயலாளர் |

**பாலக்கோடு சட்டன்றத் தொகுதி**
நாள் : 04.07.2023 செவ்வாய்க்கிழமை

| ஒன்றியம் / பேரூராட்சி இடம் | தலைமைக் கழக பேச்சாளர்கள் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|
| **காரிமங்கலம் கிழக்கு** பந்தாரஅள்ளி காலை 9.00 மணி | திரு. பா.செந்தாமரைக் கண்ணன் | திரு. T.அன்பழகன் ஒன்றிய கழக செயலாளர் |
| **காரிமங்கலம் பேரூர்** அம்பேத்கர் நகர் 10-வது வார்டு காலை 10.00 மணி | திரு. பா.செந்தாமரைக் கண்ணன் | திரு. K.V.K.சீனிவாசன் பேரூர் கழக செயலாளர் |
| **காரிமங்கலம் மத்தியம்** மொட்டலூர் காலை 11.00 மணி | திரு. பா.செந்தாமரைக் கண்ணன் | திரு. இல.கிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர் |
| **காரிமங்கலம் மேற்கு** ஜிட்டாண்டஅள்ளி ஊராட்சி - சொக்கம்பட்டி பகல் 12.00 மணி | திரு. பா.செந்தாமரைக் கண்ணன் | திரு. M.V.T.கோபால், ஒன்றிய கழக செயலாளர் |
| **பாலக்கோடு மேற்கு** கும்மனூர் ஊராட்சி - வேடம்பட்டி மாலை 3.00 மணி | திரு. A.அப்துல்ரகுமான் பாரி | திரு. P.K.அன்பழகன் ஒன்றிய கழக செயலாளர் |
| **மாரண்டஅள்ளி பேரூர்** பாலசுப்ரமணி தெரு 4-வது வார்டு மாலை 4.00 மணி | திரு. A.அப்துல்ரகுமான் பாரி | திரு. M.A.வெங்கடேசன் பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி தலைவர் |
| **பாலக்கோடு மத்தியம் P.செட்டிஅள்ளி ஊராட்சி - புரத்தூர்** மாலை 5.00 மணி | திரு. A.அப்துல்ரகுமான் பாரி | திரு. S.முனியப்பன் ஒன்றிய கழக செயலாளர் |
| **பாலக்கோடு பேரூர்** மந்தை வெளி வார்டு - 1, 8, 9 மாலை 6.00 மணி | திரு. A.அப்துல்ரகுமான் பாரி | திரு. P.K.முரளி பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி தலைவர் |

அதுசமயம் சம்பந்தப்பட்ட ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் மற்றும் இளைஞரணியினர் இணைந்து தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களை சிறப்பாக ஏற்பாடு செய்து கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், சார்பணியினர், உள்ளாட்சி மன்ற முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொள்ளும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்து தெருமுனை பிரச்சார கூட்டங்களை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.